©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு.

தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 7] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 22, 2012
மாசி 10, திருவள்ளுவர் ஆண்டு–2043

பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

2012–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன்மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது :—

தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2012.

1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:—

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன்மூலம் பிறப்பிக்கின்றார்:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்த அவசரச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983. **89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், “பத்தாண்டுகள் ஆறு மாதங்கள்” என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக “பதினோராண்டுகள்” எனும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2011. **நீக்கம்.**

3. 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

2012–ஆம் ஆண்டு,
ஜனவரித் திங்கள்,
23–ஆம் நாள்.

கே. ரோசையா,
தமிழ்நாடு ஆளுநர்.

விளக்கவுரை

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001–ஆம் ஆண்டு மே திங்கள் 25–ஆம் நாளிலிருந்தும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001–ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாளிலிருந்தும் ஓராண்டுக் காலஅளவிற்கு 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 89–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன கால அளவிற்குள்ளாக மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இயலவில்லையாதலால், மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தியதன் மூலம் மேற்சொன்ன பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்கால அளவானது 2011–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. அவர்களின் நியமன கால அளவானது தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாளன்றும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ஆம் நாளன்றும் முடிவடைவதாக இருந்தது.

2. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்காக தேர்தல்கள் முறையே, 2007–ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 7–ஆம் நாளன்றும், 2007–ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 11–ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. எனவே அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றனவோ, அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவதெனவும் முடிவு செய்து அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. மேற்சொன்ன பொருட்பாட்டின் காரணமாக, தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடத்த இயலவில்லை. அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுமங்கள் அமைத்துருவாக்கப்பட்ட பின்னர் மட்டுமே மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தவியலும். எனவே அரசானது, அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன்மூலம் தொடக்கநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாளுக்கு அப்பாலும், மைய மற்றும் உச்சநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ஆம் தேதிக்கு அப்பாலும் மேலும் ஆறு மாதங்களைக் கொண்டதொரு கால அளவிற்கு மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதென முடிவு செய்துள்ளது.

4. அப்போது மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததால் அரசின் மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக அவசரச் சட்டமொன்றைப் பிறப்பிப்பது தேவையானதாக ஆயிற்று. அதற்கிணங்கிய வகையில், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டமானது, (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2011) 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு மற்றும் அது 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

5. மேற்சொன்ன 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2011) பிறப்பிக்கப்பட்ட பின்னர், 2011–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15–ஆம் நாளன்று மாநிலச் சட்டமன்றப் பேரவையானது மீண்டும் கூட்டப்பட்டது. அன்றைய தினத்தில், முல்லைப் பெரியாறு அணையின் பேரிலான தீர்மானம் ஒன்றைப் பிறப்பித்ததைத் தவிர, பிற அலுவல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, 2011–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15–ஆம் நாளன்று சட்டமன்றப்பேரவையில் அந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமையும் வகையிலான சட்டமுன்வடிவானது அறிமுகப்படுத்தப்படவில்லை.

6. அரசமைப்பின் **213–**ஆம் உறுப்பின் **(2)** எனும் கூறில் குறித்துரைக்கப்பட்ட ஆறு வாரங்கள் எனும் கால அளவானது **2011–**ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் **15–**ஆம் நாளிலிருந்து தொடங்குகிறது. அதன் விளைவாக இந்த அவசரச் சட்டமானது, **2012–**ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் **25–**ஆம் நாளன்று ஆறு வாரங்கள் கால அளவானது கழிவுறுவதால், நடைமுறைக்கு வருவது அற்றுப்போகும். எனவே, தொடக்க நிலைக் கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த அளவில் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை **2011–**ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் **24–**ஆம் நாளுக்கு அப்பால் ஆறு மாதங்கள் கொண்டதொரு கால அளவிற்கும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் **2011–**ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் **25–**ஆம் நாளுக்கு அப்பால் ஆறு மாதங்கள் கொண்டதொரு கால அளவிற்கும் நீட்டிப்பதற்கென மீண்டும் அவசரச் சட்டமொன்றைப் பிறப்பிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அவசரச் சட்டமானது மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. ஜெயசந்திரன்,
அரசுச் செயலாளர்,
சட்டத் துறை.

(தமிழாக்கம்)

ச. சந்திரசேகரன்,
இயக்குநர்,
தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.

2012—ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன்மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது :—

தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2012.

1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:—

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213—ஆம் உறுப்பின் (1)—ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன்மூலம் பிறப்பிக்கின்றார்:—

1. (1) இந்த அவசரச் சட்டம், 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2011—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998.

2. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் 16—ஆம் பிரிவில், (உ) எனும் கூறில், ''பதினோராண்டுகள்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''பதினாறாண்டுகள்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 16—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், 2011—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1—ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மற்றும் 2011—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22—ஆம் நாளுக்கு முன்னரோ இந்த அவசரச்சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் அலுவலர் எவராலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் செய்யப்பட்ட செயல்கள் அனைத்தும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும், இந்த அவசரச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டமானது, அத்தகைய செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட போதான அனைத்து முக்கியமான காலங்களிலும் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்றே, சட்டத்திற்கு இணங்கிய வகையில் அனைத்து நோக்கங்களுக்காகவும் செல்லத்தக்கவாறு எப்போதுமே செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும். செல்லத்தக்க தாக்குதல்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2011.

4. (1) 2011—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. நீக்கம்.

2012—ஆம் ஆண்டு,
ஜனவரித் திங்கள்,
24—ஆம் நாள்.

கே. ரோசையா,
தமிழ்நாடு ஆளுநர்.

விளக்கவுரை

28/2006 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1998–ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 16–ஆம் பிரிவின் (c) எனும் கூறுக்கு ஏற்ப ஒப்பந்தப்புள்ளியை வரவேற்கும் அதிகார அமைப்பினால் வரவேற்கப்படும், மதிப்பீடு செய்யப்படும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான 9 மற்றும் 10–ஆம் பிரிவுகளின் வகைமுறைகளானவை, மேற்சொன்ன 43/1998 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து அதாவது 2000–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாளிலிருந்து, பதினோராண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு, அரசின் ஒரு சில துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள் மற்றும் அத்தகைய பிற நிறுவனங்களிலிருந்து பெறப்படும் அவற்றால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் அல்லது வழங்கப்பெறும் பணிச்சேவைகளைப் பொறுத்தஅளவிலான கொள்முதல்களுக்குப் பொருந்துதல் கூடாது. மேற்சொன்ன துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள் மற்றும் அத்தகைய பிற நிறுவனங்களானவை, வாங்குகிற நடவடிக்கைகளில், எதிர்கொண்டு நிலைத்திருக்கும் வகையிலும், போட்டியிடும் வகையிலும் அவற்றை ஊக்கபடுத்தும் நோக்குடன், அரசானது மேற்சொன்ன 43/1998 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 16–ஆம் பிரிவின் மேற்சொன்ன (c) எனும் கூறின்படியான அத்தகைய அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் முதலானவற்றிற்கு வழங்கப்பட்ட விலக்களிப்பை 2011–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாளிலிருந்து அது முதற்கொண்டும் மேலும் ஐந்து ஆண்டுகளைக்கொண்டதொரு கால அளவிற்கு நீட்டிப்பதெனவும், அந்த நோக்கத்திற்காக, மேற்சொன்ன சட்டத்தின் 16–ஆம் பிரிவின் மேற்சொன்ன (c) எனும் கூறினை திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில் 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2011) 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டது; அது 2011–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

2. மேற்சொன்ன 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2011) பிறப்பிக்கப்பட்ட பின்னர், 2011–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15–ஆம் நாளன்று இம்மாநிலத்தின் சட்டமன்றப் பேரவை மீண்டும் கூட்டப்பட்டது. அன்றைய தினத்தில் முல்லைப்பெரியாறு அணையின் பேரிலான தீர்மானம் ஒன்றை பிறப்பித்ததைத் தவிர வேறு அலுவல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே 2011–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15–ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் அந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமையும் வகையிலான சட்டமுன்வடிவானது அறிமுகப்படுத்தப்படவில்லை. அரசமைப்பின் 213–ஆம் உறுப்பின் (2)–ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட ஆறு வாரங்கள் எனும் கால அளவானது 2011–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15–ஆம் நாளிலிருந்து தொடங்குகிறது. அதன் விளைவாக இந்த அவசரச் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25–ஆம் நாளன்று ஆறு வாரங்கள் கால அளவானது கழிவுறுவதால், நடைமுறைக்கு வருவது அற்றுப்போகும். எனவே, அத்தகைய அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் முதலானவற்றிற்கு மேற்சொன்ன 43/1998 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 16–ஆம் பிரிவின் (c) எனும் கூறின்படி வழங்கப்பட்டுள்ள விலக்களிப்பை, 2011–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாளிலிருந்தும் அது முதற்கொண்டும் மேலும் ஐந்து ஆண்டுகளைக் கொண்டதொரு கால அளவிற்கு நீட்டிப்பதற்காகவும், அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தின் 16–ஆம் பிரிவின் மேற்சொன்ன (c) எனும் கூறினைத் திருத்துவதற்காகவும் மீண்டும் அவசரச் சட்டமொன்றினைப் பிறப்பிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. இந்த அவசரச் சட்டமானது மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. ஜெயசந்திரன்,
அரசுச் செயலாளர்,
சட்டத் துறை.

(தமிழாக்கம்)

ச. சந்திரசேகரன்,
இயக்குநர்,
தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.